தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2012–2013)

(பதினான்காவது பேரவை)

மூன்றாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 27 DEC 2013)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை.–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2012–2013)

(பதினான்காவது பேரவை)

மூன்றாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கம்
1.	2012–2013 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v
3.	அறிக்கை	..	vii

இணைப்பு–1

1.	"தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்" 2007–2008 முதல் 2009–2010 வரையிலான ஆண்டறிக்கைகள் பேரவைக்கு காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் அரசுச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	1 – 2
2.	"தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின்" 2009–2010 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் பேரவைக்கு காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் அரசுச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	3
3.	"தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின்" 2002–2003 ஆம் ஆண்டு முதல் 2010–2011 வரையிலான ஆண்டறிக்கைகள் பேரவைக்கு காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை	..	4 – 5

இணைப்பு–2

1.	2012–2013 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	..	6


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பதினான்காவது பேரவை)

2012–2013 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2012–ஆம் ஆண்டு மே திங்கள் 19 –ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

திரு. கா. தமிழரசன்

திரு. என்.எஸ்.என். நடராஜ்

திரு. கே.பி. நாகராஜன்

திரு. இரா. மணிமாறன்

திரு. பொன். ராஜா

திரு. ப. சிவக்கொழுந்து

திரு. க. தினகரன்

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்

திரு. இரா. அண்ணாதுரை

திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	:	செயலாளர்
திருமதி. கோ. காயத்ரி	:	இணைச் செயலாளர்
திரு. சு. சந்திரன்	:	துணைச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2012–2013–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொது நிறுவனங்களின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 2007–2008 முதல் 2009–2010 வரையிலான ஆண்டறிக்கைகள், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2009–2010 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் 2002–2003 ஆம் ஆண்டு முதல் 2010–2011 வரையிலான ஆண்டறிக்கைகள் பேரவைக்கு காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து 19.10.2012 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசுச் செயலாளர் மற்றும் தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் **மூன்றாவது** அறிக்கையை (2012–2013) குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள்/ தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான இவ்வறிக்கைக்கு 21.01.2013 அன்று சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
21.01.2013
நந்தன– தை 8 –ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 2012–2013–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, 19.10.2012 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், பொது நிறுவனங்களின் கீழ் இயங்கும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள்/ஆண்டுக் கணக்குகள் குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசுச் செயலாளர் மற்றும் தொழில் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் **மூன்றாவது அறிக்கை.**

சென்னை–600 009.
21.01.2013
நந்தன– தை 8 –ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டறிக்கை குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசுச் செயலாளர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்	2007–2008	31.03.2009	22.08.2011	43 வது அறிக்கை: 2 வருடம் 4 மாதங்கள் 21 நாட்கள்
	2008–2009	31.03.2010	22.08.2011	44 வது அறிக்கை: 1 வருடம் 4 மாதங்கள் 21 நாட்கள்
	2009–2010	31.03.2011	04.04.2012	45 வது அறிக்கை: 1 வருடம் 3 நாட்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 2007–2008, 2008–2009 மற்றும் 2009–2010 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான அறிக்கைகளும் காலதாமதம் ஆனதற்கு சட்டப்படிக்கான தணிக்கையாளரின் ஒத்துழைப்பு இல்லாததாலும், முதன்மைத் தணிக்கையாளர்கள் முடிவுக்குப்பின்னர் அனைத்து விவரங்களையும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படுவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் அறிக்கைகள் குறித்த காலத்திற்குள் பேரவையில் அளிக்கப்படாமல் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை அரசுச் செயலாளர் அவர்கள் குழுவிற்கு தெரிவித்தார்.

ஆண்டறிக்கைகள் வருடவாரியாக சமர்ப்பிக்கப்படாதது மற்றும் தணிக்கையாளர் கணக்கு இறுதி செய்த பின்னர் ஆறுமாதத்திற்குள் பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்படாதது குறித்தும் குழு வினவியபோது, எளிமையான அறிக்கையினை முதலில் வைக்கப்பட்டதாகவும், இனிவருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாக அரசுச் செயலாளர் உறுதி அளித்தார்.

மேலும், சட்டப்படிக்கான வேறு தணிக்கையாளர் தற்போது நியமிக்கப்பட்டு முழு ஒத்துழைப்பு தருவதால் காலதாமதம் வெகுவாக குறைந்துள்ளது என்றும், வரும் ஆண்டுகளில் காலதாமதமின்றி அறிக்கைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அரசுச் செயலாளர் தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரை
(7)

1) ஆண்டறிக்கைகள் வருடவாரியாக பேரவைக்கு சமர்ப்பிக்க குழு அறிவுறுத்துகிறது. இனிவருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் துறை கண்காணிக்கவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

2) சட்டப்படிக்கான தணிக்கையாளர் Company Law Board நியமனம் செய்தாலும் அவர்களிடமிருந்து விரைவில் கணக்குகளை முடித்து பெறுவது நிறுவனத்தின் பணியாகும். எனவே, சரியான ஒத்துழைப்பு இல்லாத காரணம் என்பது ஏற்கத்தக்கதல்ல. மேலும், நிர்வாக காரணங்களினால் ஏற்படும் காலதாமதத்தினை இனிவருங்காலங்களில் தவிர்க்கப்படவேண்டும் என்றும் குழு அறிவுறுத்தியது.

அரசுச் செயலாளர் அவர்கள் இனிவருங்காலங்களில் இக்காலதாமதம் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்ததை இக்குழு ஏற்றுக்கொண்டு மேற்காணும் காலதாமதம் இனி ஏற்படாவண்ணம் நிறுவனம் உரிய காலத்தில் அறிக்கைகளை பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆண்டறிக்கை குறித்து கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசுச் செயலாளர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2009–2010	31.03.2011	31.01.2012	9 மாதங்கள் 30 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நமது மாநிலத்தை பொருத்தவரையில் 496 அலகுகள் 26 மாவட்டங்களில் செயல்பட்டு வருவதால் தணிக்கை செய்ய பொருள் தணிக்கை, செலவுச்சீட்டு ஒப்பாய்வு செய்தல், உள்ளாட்சி நிதிக்கணக்கு தணிக்கை ஆகியவற்றின் சான்றிதழ்களைப் பெற்று, மாவட்ட அளவில் தணிக்கைச் சான்று வாங்கிய பிறகு, தமிழக அளவில் தலைமைத் தணிக்கையாளர் சான்று பெற வேண்டும் என்பதால் இக்காலதாமதம் ஏற்படுவதாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்தார். இதனை தவிர்க்க தற்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இனிவருங்காலங்களில் இதுபோன்று காலதாமதம் ஏற்படாது எனவும் குழுவின் முன் தெரிவித்தார்.

அறிக்கைகள் அச்சிடப்படுவதற்கு அதிக காலம் ஏற்பட்டுள்ளது குறித்து குழு சுட்டிக்காட்டியபோது அறிக்கைகளை தமிழில் தயார் செய்தபிறகு அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகவும், அறிக்கை அச்சிடுவதற்கு வாரியம் பெரிய தொகையினை செலவிட்டு வருவதாகவும் அரசுச் செயலாளர் தெரிவித்தார். மேலும், தற்போது பணிகளை விரைவுபடுத்த ஒரு சில பணிகளை தவிர்த்துவிட்டு மீதம் உள்ள பணிகளை எளிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளதாகவும் தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரை
(7)

சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனம் மாநில கணக்காய்வுத் துறைத் தலைவரின் கருத்துரை பெறவேண்டியது இல்லை, பொதுக்குழுவின் ஒப்புதலும் பெறவேண்டியது இல்லை. முதன்மைத் தணிக்கையாளர் அறிக்கையை அளித்தபின்னர் அவ்வறிக்கையினை அச்சிட்டு அரசுக்கு அனுப்பி பேரவையில் சமர்ப்பித்தால் போதுமானதாகும். இந்நிலையில் தொடர்ந்து காலதாமதமாக பேரவைக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கப்படுவது குறித்து மிகவும் வருந்துகிறது. குழுவின் பரிந்துரைகளை நிறுவனம் முறையாக பின்பற்றவில்லை என்பதையே இது காட்டுகிறது. இதுபோன்று வருங்காலங்களில் காலதாமதம் ஏற்படாமல் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்	2002–2003	31.03.2004	04.02.2012	27 வது அறிக்கை: 7 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2003–2004	31.03.2005	04.02.2012	28 வது அறிக்கை: 6 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2004–2005	31.03.2006	04.02.2012	29 வது அறிக்கை: 5 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2005–2006	31.03.2007	04.02.2012	30 வது அறிக்கை: 4 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2006–2007	31.03.2008	04.02.2012	31 வது அறிக்கை: 3 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2007–2008	31.03.2009	04.02.2012	32 வது அறிக்கை: 2 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2008–2009	31.03.2010	04.02.2012	33 வது அறிக்கை: 1 வருடம் 10 மாதங்கள் 3 நாட்கள்
	2009–2010	31.03.2011	04.02.2012	34 வது அறிக்கை: 10 மாதங்கள் 3 நாட்கள்
	2010–2011	31.03.2012	16.05.2012	35 வது அறிக்கை: 1 மாதம் 15 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தில் 2010 வரை நிறுவன செயலர் அவர்களே மேலாண்மை இயக்குநராக இருந்து வந்துள்ளார். அவருக்கு இது கூடுதல் பொறுப்பு என்பதாலும் ஊதியம் போதவில்லை என்ற காரணத்தினாலும் அவர்கள் பணிகளை சரிவர கவனிக்கவில்லை. நிறுவனத்தின் 2002–2003 முதல் 2010–2011 வரை உள்ள அறிக்கைகள் சரியான நேரத்தில் முடிக்கப்பட்டு அச்சிட்டு நிறுவனத்தின் வசம் வைக்கப்பட்டிருந்தது. அரசிடமிருந்து தகவல் வந்தபின்னர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற காரணத்தினால் அவற்றை நிறுவனம் சமர்ப்பிக்கவில்லை என நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தெரிவித்தார். மேலும், தான் பதவி ஏற்றபின்னர் நிலுவையில் இருந்த அனைத்து அறிக்கைகளும் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இனிவருங்காலங்களில் அறிக்கைகளை உரிய காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரை
(7)

1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 619–எ(3) பிரிவின்படி, அரசு நிறுவனங்களின் கணக்குகள், நிதியாண்டு முடிவடைந்த ஒரு வருட காலத்திற்குள் அறிக்கையாக சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதை துறை நிறுவனத்திற்கு அறிவுறுத்தாதது குறித்து குழு வருந்துகிறது. இனிவருங்காலங்களில் நிர்வாக காரணங்களால் அறிக்கைகள் பேரவையில் சமர்ப்பிக்க காலதாமதம் ஏற்படாமல் இருக்க துறை உரிய நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

நிறுவனத்தின் ஆண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் படாமல் இருந்ததற்கு நிறுவனத்தில் பணியாற்றிய நிறுவன செயலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் குழு அறிவுறுத்துகிறது.

****

இணைப்பு–2

2012–2013 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

17.07.2012 (முதல் கூட்டம்)	சென்னை
30.07.2012	அரியலூர்
19.10.2012	சென்னை
21.01.2013 22.01.2013	சேலம்

****